திருச்சி மத்திய மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டம் கே.என். நேரு முன்னிலையில் நடைபெற்றது

திருச்சி மத்திய மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டம் தில்லை நகரில் கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாக துறை அமைச்சருமான கே.என். நேரு முன்னிலையில் நடைபெற்றது கூட்டத்தில் மாவட்ட அவைத்தலைவர் பேரூர் தர்மலிங்கம் மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி, மாநகர செயலாளர் மேயர் அன்பழகன், மாவட்ட துணை செயலாளர்கள் முத்துச்செல்வம் விஜயா ஜெயராஜ், கருணாநிதி, தொகுதி பொறுப்பாளர்கள் சந்திரசேகர் உத்ராபதி செல்வம் பொருளாளர் துரைராஜ், வழக்கறிஞர் ஓம் பிரகாஷ் டோல்கேட் சுப்பிரமணி கிராப்பட்டி செல்வம், பகுதி செயலாளர்கள் இளங்கோ, கமல் முஸ்தபா நாகராஜ் கனகராஜ் கலைச்செல்வி, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் கவிதா, சோழன் சம்பத் முத்து பழனி உத்தமர் சீவி ராஜேந்திரன் கலை மலைக்கோட்டை பந்தல் ராமு சதீஷ், எம்ஆர் எஸ் குமார் தஸ்தகீர் மற்றும் கழக முன்னோடிகள் செயல்வீரர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தில், வருகிற செப்டம்பர் 17ந் தேதி கரூர் மாவட்டத்தில் நடைபெறும் முப்பெரும் விழாவில் திரளாக கலந்து கொள்வது என்று கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

ஒன்றிய பா.ஜ.க அரசைக் கண்டித்து "மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணி" சார்பில் "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்"

திருப்பூர் கிழக்கு - தெற்கு மாவட்டக் கழகத்தினர் பெரும் திரளாக பங்கேற்பீர்!

மாவட்டப் பொறுப்பாளர் - அமைச்சர் மு.பெ.சாமிநாதன் – மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன் வேண்டுகோள்!

திருப்பூர்,செப்.1- அமெரிக்க அரசின் 50% வரி விதிப்பால் கடும் பாதிப்பிற்குள்ளாகி உள்ள திருப்பூர் உள்ளிட்ட தொழில் நகரங்களைக் கண்டுகொள்ளாமல் கைவிட்ட ஒன்றிய பா.ஜ.க அரசுக்கு எதிராகவும், திருப்பூரைத் தொடர்ந்து புறக்கணித்து வரும் ஒன்றிய பா.ஜ.க அரசைக் கண்டித்தும் உடனடி நிவாரண நடவடிக்கைகளை ஒன்றிய பா.ஜ.க அரசு மேற்கொள்ள வலியுறுத்தியும் "மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி" சார்பில் "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" வருகிற 02-09-2025 செவ்வாய்க்கிழமை அன்று காலை 10.00 மணியளவில் திருப்பூர் ரயில் நிலையம் அருகில் நடைபெற உள்ளது. இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் திருப்பூர் கிழக்கு மற்றும் தெற்கு மாவட்டக் கழகத்தினர் பெரும் திரளாக பங்கேற்று இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தை வெற்றியடையச் செய்திட வேண்டும் என்று திருப்பூர் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்தியப் பொருட்கள் இறக்குமதி மீது அமெரிக்கா விதித்துள்ள 50% வரி விதிப்பால் கடும் நெருக்கடியையும், பெரும் பாதிப்பினையும் சந்தித்துள்ளது பின்னலாடை தொழிலின் மையமான திருப்பூர் கிட்டத்தட்ட 3,000 கோடி ரூபாய் மதிப்பிலான ஏற்றுமதி பாதிக்கப்பட்டுள்ள தோடு லட்சக்கணக்கான மக்கள் வேலை இழக்கும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. பணமதிப்பிழப்பு. முறையற்ற GST கொரோனா பேரிடர் என்ற அடுத்தடுத்த தொடர் தாக்குதல்களால் நசிந்து போயிருந்த திருப்பூர் பின்னலாடை தொழிலானது தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் புத்துயிர் பெற்று மீண்டும் பழைய நிலையை எட்டிப்பிடித்து ஆண்டுக்கு 45,000 கோடிக்கும் அதிகமான ஏற்றுமதி வர்த்தகம் நடைபெற தொடங்கியது. ஆனால் அதன் மீது விழுந்த பேரிடியாக அமெரிக்காவின் 50% வரிவிதிப்பு வந்து விழுந்தது. ஒன்றிய பா.ஜ.க அரசின் வெளியுறவுக் கொள்கைகளில் ஏற்பட்ட மோசமான தோல்வியையே இந்த விளைவுகள் காட்டுகின்றன.

திருப்பூர் பின்னலாடை நிறுவனங்கள் மற்றும் ஏற்றுமதியாளர் சங்கங்களின் கோரிக்கைகளைக் கேட்டறிந்து. கடந்த 16-ஆம் தேதியே தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் பிரதமர் மோடி அவர்களுக்கு கடிதம் எழுதி இருந்தார். அதில் தமிழ்நாட்டின் ஜவுளித் துறை கிட்டத்தட்ட 75 இலட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்துவருகிறது என்பதை குறிப்பிட்டு. அமெரிக்க வரிவிதிப்பின் காரணமாக 30 இலட்சம் பேர் வேலை இழுக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அமெரிக்க வரி விதிப்பால் ஏற்படப்போகும் பாதிப்புகளை முன்கூட்டியே தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் சுட்டிக்காட்டி நிவாரண நடவடிக்கைகளை ஒன்றிய பா.ஜ.க அரசு மேற்கொள்ள வேண்டும் என எடுத்துரைத்தும் எந்த நிவாரண நடவடிக்கையையும் ஒன்றிய பா.ஜ.க அரசு எடுக்கவில்லை. மீண்டும் ஒரு முறை தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் 28.08.2025 அன்று வலியுறுத்தியும் கிணற்றில் போட்ட கல் போல அமைதியாய் இருக்கிறது ஒன்றிய பா.ஜ.க அரசு, ஆபத்து வர போகிறது என்று எச்சரித்தும் அதை எதிர்கொள்ள எந்த நிவாரண நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை ஆபத்து வந்த பின்னும் அதை பற்றி துளியும் கவலையின்றி அமைதியாய் இருக்கிறது ஒன்றிய பா.ஜ.க அரசு, பெரும் முதலாளிகளான அதானி, அம்பானிக்கு ஒரு பிரச்சனை என்றால் ஓடோடி வரும் ஒன்றிய பா.ஜ.க அரசு உள்நாட்டில் உள்ள சிறு வணிகர்களின் நலனை கவனத்தில் கொள்வதில்லை, குறிப்பாக தமிழ்நாட்டின் திருப்பூர் உள்ளிட்ட தொழில்நகரங்களைத் தொடர்ந்து புறக்கணிப்பதையே செய்து வருகிறது. பாதிப்புகளை சரி செய்ய முன் வராமல் மௌனம் சாதிப்பது பின்னலாடை ஏற்றுமதியின்மையமான திருப்பூரை முடக்கும் அமெரிக்காவின் சூழ்ச்சிக்கு ஒன்றிய பா.ஜ.க அரசும் துணை போகிறது. அமெரிக்கா ஒருபுறம் வரி போட்டு நம்மை முடக்க நினைத்தால் மறுபுறம் வரி நிவாரணம் ஏதும் கொடுக்காமல் ஒன்றிய பா.ஜ.க அரசும் நம்மை முடக்கி வருகிறது.

இதனால் ஏற்பட்ட பாதிப்புகளை சரிசெய்ய ஒன்றிய பா.ஜ.க அரசு வரி சலுகை உள்ளிட்ட நிவாரண உதவிகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள வேண்டும். அமெரிக்க வரி வீதிப்பால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள ஏற்றுமதியாளர்கள் மட்டும் தொழிலாளர்களின் குரலாய் இருந்து மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி என்றும் போராடும். திருப்பூரைத் தொடர்ந்து புறக்கணித்து வரும் ஒன்றிய பா.ஜ.க அரசைக் கண்டித்தும் உடனடி நிவாரண நடவடிக்கைகளை ஒன்றிய பா.ஜ.க அரசு மேற்கொள்ள வலியுறுத்தியும் "மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணி" சார்பில் "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" வருகிற

02-09-2025 செவ்வாய்க்கிழமை அன்று காலை 10.00 மணியளவில் திருப்பூர் ரயில் நிலையம் அருகில் நடைபெற உள்ளது.

அதுசமயம் திருப்பூர் கிழக்கு மற்றும் தெற்கு மாவட்ட கழகத்திற்குட்பட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, கிளைக் கழக நிர்வாகிகள், இந்நாள் முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்டக் கழக பிரதிநிதிகள், கழக துணை அமைப்புகளின் இந்நாள் - முன்னாள் நிர்வாகிகள், உள்ளாட்சி மக்கள் பிரதிநிதிகள், கழகத்தின் செயல்வீரர்கள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் - தோழர்கள் கலந்து கொண்டு இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தை வெற்றியடையச் செய்திட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம் என்று வேண்டு கோள் விடுத்துள்ளனர்.

அமெரிக்க அரசின் 50% வரி விதிப்பால் கடும் பாதிப்பிற்குள்ளாகி உள்ள திருப்பூர் உள்ளிட்ட தொழில் நகரங்களைக் கண்டுகொள்ளாமல் கைவிட்ட ஒன்றிய பாஜக அரசைக் கண்டித்தும் உடனடி நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தியும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் 02.09.2025 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் திருப்பூர் இரயில் நிலையம் முன்பு நடத்துவது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் மத்திய மாவட்டக் கழக அலுவலகமான முரசொலி மாறன் வளாகத்தில் மாவட்டச் செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் தலைமையில் திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்புராயன், மாநகராட்சி மேயர், வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் ந.தினேஷ்குமார், தெற்கு மாநகர செயலாளர் டிகேடி மு.நாகராசன், கூட்டணி கட்சி மாவட்டச் செயலாளர்கள் முன்னிலையில் நடைபெற்றது. இதில் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் சட்டமன்ற தொகுதி, கொளத்துப்பாளையம் பேரூராட்சி, இராமமூர்த்தி நகர், இந்திராகாந்தி மெட்ரிக்குலேசன் பள்ளியில் நடைபெற்ற கொளத்துப்பாளையம் பேரூராட்சிக்கான "உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமை மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் நேரில் ஆய்வு மேற்கொண்டு முகாமில் பெறப்பட்ட மனுக்கள் மீது உடனடியாக தீர்வு காணப்பட்டு பயனாளிகளுக்கு அரசு சார்ந்த சான்றிதழ்கள் மற்றும் கர்ப்பிணிகளுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களை வழங்கினார். இதில் தாராபுரம் வருவாய் வட்டாட்சியர் , தாராபுரம் தனி வட்டாட்சியர் சமூக பாதுகாப்புத்திட்ட அலுவலர், தாராபுரம் கிழக்கு ஒன்றியப் பொறுப்பாளர், பேரூராட்சி துணைத் தலைவர் கே.கே.துரைசாமி, பேரூராட்சி தலைவர் சுதா கருப்புசாமி, அரசு அதிகாரிகள், வார்டு கவுன்சிலர்கள், இந்நாள்முன்னாள் மக்கள் பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், பயனாளிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

அமெரிக்க அரசின் 50% வரிவிதிப்பால் கடும் பாதிப்பிற்குள்ளாகி உள்ள திருப்பூர் உள்ளிட்ட தொழில் நகரங்களைக் கண்டுகொள்ளாமல் கைவிட்ட

ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிராக மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்"!

திருப்பூர் மத்திய மாவட்டக் கழகத்தினர் பெரும் திரளாக பங்கேற்பீர்! மாவட்டச் செயலாளர் - க.செல்வராஜ் எம்.எல்.ஏ., அறிக்கை!

திருப்பூர், செப்.1- அமெரிக்க அரசின் 50% வரி விதிப்பால் கடும் பாதிப்பிற்குள்ளாகி உள்ள திருப்பூர் உள்ளிட்ட தொழில் நகரங்களைக் கண்டுகொள்ளாமல் கைவிட்ட ஒன்றிய பா.ஜ.க அரசுக்கு எதிராகவும், திருப்பூரைத் தொடர்ந்து புறக்கணித்து வரும் ஒன்றிய பா.ஜ.க அரசைக் கண்டித்தும் உடனடி நிவாரண நடவடிக்கைகளை ஒன்றிய பா.ஜ.க அரசு மேற்கொள்ள வலியுறுத்தியும் "மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணி" சார்பில் "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" வருகிற 02-09-2025 செவ்வாய்க்கிழமை அன்று காலை 10.00 மணியளவில் திருப்பூர் ரயில் நிலையம் அருகில் கழக துணைப் பொதுச் செயலாளர், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர், ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஆ.இராசா தலைமையில் திருப்பூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் வரவேற்புரையில், திருப்பூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், திருப்பூர் தெற்கு மாவட்ட கழகச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது. இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் திராவிடர் கழக தலைவர், ஆசிரியர் கி.வீரமணி, ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, கழக மேற்கு மண்டலப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர், ஸ்ரீபெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வப் பெருந்தகை, விடுதலைச் சிறுக்கைகள் கட்சி தலைவர், சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினர் தொல்.திருமாவளவன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்), மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன், கொங்கு நாடு மக்கள் தேசிய சுட்சி பொதுச்செயலாளர், திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் ஈ.ஆர்.ஈஸ்வரன், மனிதநேய மக்கள் கட்சி தலைவர், ராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.எச்.ஜவாஹிருல்லா, ம.தி.மு.க. அவைத்தலைவர் அ.அர்ச்சுன்ராஜ், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் பொதுச் செயலாளர் கே.ஏ.முகமது அபுபக்கர், தமிழக வாழ்வுரிமை கட்சி தலைவர், பண்ருட்டி சட்டமன்ற உறுப்பினர் தி.வேல்முருகன், மனிதநேய ஜனநாயக கட்சி தலைவர் மு.தமிமுன் அன்சாரி, மக்கள் நீதி மய்யம் மாநில துணைத் தலைவர் ஆர்.தங்கவேல், தந்தை பெரியார் திராவிட கழக பொதுச்செயலாளர் கு.இராம கிருட்டிணன், ஆதித்தமிழர் பேரவை நிறுவன தலைவர் இரா.அதியமான் ஆகியோர்

கண்டன உரையாற்றுகின்றனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் திருப்பூர் மத்திய மாவட்டக் கழகத்தினர் பெரும் திரளாக பங்கேற்று இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தை வெற்றியடையச் செய்திட வேண்டும் என்று திருப்பூர் மத்திய மாவட்டச் செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்திய பொருட்கள் இறக்குமதி மீது அமெரிக்கா விதித்துள்ள 50% வரி விதிப்பால் கடும் நெருக்கடியையும், பெரும் பாதிப்பினையும் சந்தித்துள்ளது பின்னலாடை தொழிலின் மையமான திருப்பூர், கிட்டத்தட்ட 3000 கோடி ரூபாய் மதிப்பிலான ஏற்றுமதி பாதிக்கப்பட்டுள்ள தோடு லட்சக்கணக்கான மக்கள் வேலை இழக்கும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. பணமதிப்பிழப்பு, முறையற்ற GST, கொரோனா பேரிடர் என்ற அடுத்தடுத்த தொடர் தாக்குதல்களால் நசிந்து போயிருந்த திருப்பூர் பின்னலாடை தொழிலானது தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் புத்துயிர் பெற்று மீண்டும் பழைய நிலையை எட்டிப்பிடித்து ஆண்டுக்கு 45,000 கோடிக்கும் அதிகமான ஏற்றுமதி வர்த்தகம் நடைபெற தொடங்கியது. ஆனால் அதன் மீது விழுந்த பேரிடியாக அமெரிக்காவின் 50% வரிவிதிப்பு வந்து விழுந்தது. ஒன்றிய பா.ஜ.க. அரசின் வெளியுறவுக் கொள்கைகளில் ஏற்பட்ட மோசமான தோல்வியையே இந்த விளைவுகள் காட்டுகின்றன.

திருப்பூர் பின்னலாடை நிறுவனங்கள் மற்றும் ஏற்றுமதியாளர் சங்கங்களின் கோரிக்கைகளைக் கேட்டறிந்து, கடந்த 16-ஆம் தேதியே தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் ஒன்றிய பிரதமர் மோடி அவர்களுக்கு கடிதம் எழுதி இருந்தார். அதில் தமிழ்நாட்டின் ஜவுளித் துறை கிட்டத்தட்ட 75 இலட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்து வருகிறது என்பதை குறிப்பிட்டு, அமெரிக்க வரி விதிப்பின் காரணமாக, 30 இலட்சம் பேர் வேலை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதையும் சுட்டிக்காட்டி இருந்தார்.

அமெரிக்க வரி விதிப்பால் ஏற்படப்போகும் பாதிப்புகளை முன்கூட்டியே தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் சுட்டிக்காட்டி நிவாரண நடவடிக்கைகளை ஒன்றிய பா.ஜ.க. அரசு மேற்கொள்ள வேண்டும் என எடுத்துரைத்தும் எந்த நிவாரண நடவடிக்கையையும் ஒன்றிய பா.ஜ.க. அரசு எடுக்கவில்லை. மீண்டும் ஒரு முறை தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் 28.08.25 அன்று வலியுறுத்தியும் கிணற்றில் போட்ட கல் போல அமைதியாய் இருக்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு. ஆபத்து வர போகிறது என்று எச்சரித்தும் அதை எதிர்கொள்ள எந்த நிவாரண நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை ஆபத்து வந்த பின்னும் அதை பற்றி துளியும் கவலையின்றி அமைதியாய் இருக்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு. பெரும் முதலாளிகளான அதானி, அம்பானிக்கு ஒரு பிரச்சனை என்றால் ஓடோடி வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசு, உள்நாட்டில் உள்ள சிறு வணிகர்களின் நலனை கவனத்தில் கொள்வதில்லை. குறிப்பாக தமிழ்நாட்டின் திருப்பூர் உள்ளிட்ட தொழில் நகரங்களைத் தொடர்ந்து புறக்கணிப்பது ஏன்? பாதிப்புகளை சரி செய்ய முன்வராமல் மௌனம் சாதிப்பது பின்னலாடை ஏற்றுமதியின் மையமான திருப்பூரை முடக்கும் அமெரிக்காவின் சூழ்ச்சிக்கு ஒன்றிய பா.ஜ.க. அரசும் துணை போகிறதோ? என்ற சந்தேகத்தை உண்டாக்குகிறது. அமெரிக்கா ஒருபுறம் வரி போட்டு நம்மை முடக்க நினைத்தால் மறுபுறம் வரி நிவாரணம் ஏதும் கொடுக்காமல் ஒன்றிய பா.ஜ.க. அரசும் நம்மை முடக்கி வருகிறது.

அமெரிக்காவின் அழுத்தத்திற்கு அடிபணியாமல், திருப்பூர் பின்னலாடை தொழில் நிறுவனங்களைப் பாதுகாக்கும் வகையில் உடனடி நிவாரண நடவடிக்கைகளை ஒன்றிய பா.ஜ.க. அரசு எடுக்க வேண்டும். இதனால் ஏற்பட்ட பாதிப்புகளை சரி செய்ய ஒன்றிய பா.ஜ.க. அரசு வரி சலுகை உள்ளிட்ட நிவாரண உதவிகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள வேண்டும்.

அமெரிக்க வரி விதிப்பால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள ஏற்றுமதியாளர்கள் மட்டும் தொழிலாளர்களின் குரலாய் இருந்து மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி என்றும் போராடும். திருப்பூரைத் தொடர்ந்து புறக்கணித்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்தும் உடனடி நிவாரண நடவடிக்கைகளை ஒன்றிய பா.ஜ.க. அரசு மேற்கொள்ள வலியுறுத்தியும் 'மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி' சார்பில் "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" வருகிற 02-09-2025 செவ்வாய்க்கிழமை அன்று காலை 10.00 மணியளவில் திருப்பூர் இரயில் நிலையம் அருகில் நடைபெற உள்ள மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் திருப்பூர் மத்திய மாவட்ட கழகத்திற்குட்பட்ட மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டக் கழக, வார்டு, கிளைக் கழக நிர்வாகிகள், இந்நாள் முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்டக் கழக பிரதிநிதிகள், கழக துணை அமைப்புகளின் இந்நாள் - முன்னாள் நிர்வாகிகள், உள்ளாட்சி மக்கள் பிரதிநிதிகள், கழகத்தின் செயல்வீரர்கள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் - தோழர்கள் கலந்து கொண்டு இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தை வெற்றியடையச் செய்திட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன் என்று தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். இந்த ஆர்ப்பாட்டத்திற்கான ஏற்பாடுகள் அனைத்தையும் திருப்பூர் மத்திய மாவட்டச் செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் ஏற்பாடு செய்துள்ளார்.

தருமபுரி மாவட்ட விளையாட்டரங்கத்தில் மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ரெ.சதீஸ் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்,திமுக கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் வழக்கறிஞர்.ஆ.மணி ஆகியோர் தொடங்கி வைத்தனர். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.கவிதா,தருமபுரி நகர மன்ற தலைவர் திருமதி.லட்சுமி நாட்டான் மாது,வருவாய் கோட்டாட்சியர் திருமதி.காயத்ரி,மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் திருமதி. தே.சாந்தி,தருமபுரி மாவட்ட அமெச்சூர் கபாடி சங்க தலைவர் பி.பாஸ்கர்,திமுக ஒன்றிய செயலாளர் ஏ.எஸ்.சண்முகம்,திமுக ஐ.டி.விங் எம்.பி.கௌதம்,உதயசூரியன், மற்றும் மாணவ,மாணவியர்கள் கலந்து கொண்டனர்.